DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:145/2021 Deposition of Witness for : P.W.20**

| | | | |
|---|---|---|---|
| Name | : தேவி | Calling | |
| Father's Name | : | Taluk | |
| Age | : | District | |
| Village | : | | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 02-04-2026

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருச்சி மாவட்டம் துறையூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். 2017 ஆம் வருடம் காங்கேயம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றியபோது காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட மனு ரசீது எண். 126/2017 என்ற மனுவை ஆய்வாளர் உத்தரவின் பேரில் விசாரணை செய்தேன். 16.04.2017 ஆம் தேதி மேற்படி மனுவின் மீது விசாரணை மேற்கொண்டேன். மேற்படி மனுவில் சம்பந்தப்பட்ட உதயகுமார் என்பவரது மனைவி சிவன்மதி எதிர்மனுதாரர் ராக்கி அவரது தகப்பனார் மோகன் அவரது பெரியப்பா கண்ணன், சிவன்மதியின் மகனான யாத்ரா அர்ஜுனன், உதயகுமார் ஆகியோர் காவல் நிலையத்தில் இருந்தார்கள்.

2. இரு தரப்பினர்களிடையே விசாரணை செய்ததில் சிவன்மதியும் ராக்கியும் அவர்கள் இருவரும் பழகி வந்ததை ஒப்புக்கொண்டார்கள். மேலும் விசாரணையின் போது மேற்படி சிவன்மதி இனி மேற்கொண்டு தான் அவரது கணவருடன் நல்ல முறையில் வாழ்வதாகவும் ராக்கியுடன் நேரிலோ அல்லது போன் மூலமாகவோ எந்த தொடர்பும் வைத்துக்கொள்ள மாட்டேன் என்று

சொன்னார். அதை அறிக்கையாக பெற்றுக் கொண்டேன். மேற்படிஅறிக்கையில் அவரது கணவர் உதயகுமாரின் சாட்சி கையொப்பம் பெற்றேன். மேலும் விசாரணையின் போது எதிர் மனுதாரர் ராக்கி தனக்கு திருமணம் ஆகவில்லை என்றும் சிவன்மதியுடன் பழகி வந்ததை நிறுத்திக் கொள்வதாகவும் அவருடன் மேற்கொண்டு எந்த விதமான தொடர்பும் வைத்துக்கொள்ள மாட்டேன் என்று வாய்மொழியாக சொன்னதை அறிக்கையாக எழுதி வாங்கினேன். மேற்படி அறிக்கையில் அவரது தந்தை மோகன் மற்றும் பெரியப்பா கண்ணன் ஆகியோரின் சாட்சி கையொப்பம் பெற்றேன்.

3. இரு தரப்பினரும் குறிப்பிட்ட விபரங்களை ஆய்வாளரிடம் தெரிவித்தேன் மேலும் உதயகுமார் தான் தாக்கல் செய்த மனுவின் மீது எந்த விதமான மேல் நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்று எழுத்துப்பூர்வமாக கொடுத்ததை ஆய்வாளரிடம் தெரிவித்து மனு விசாரணையை முடித்து வைத்தேன். **உதயகுமார் என்பவர் எழுதிகொடுத்த மனு அ.சா.ஆ.20.** மேற்படி சம்பவம் தொடர்பாக காவல் ஆய்வாளர் என்னை தொலைபேசி மூலம் விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. காவல் ஆய்வாளர் 02.08.2017 ஆம் தேதி விசாரித்தார். அன்றைய தினம் நான் உயர் நீதிமன்ற பணியாக வெளியில் இருந்தேன். ஆய்வாளர் என்னை நேரில் விசாரிக்க நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். என்னை ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றாலும் தொலைபேசியில் விசாரித்ததாக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஆய்வாளர் உத்தரவு பேரில் மேற்படி சிவன்மதி மற்றும் ராக்கி ஆகியோரை சேலத்தில் இருந்து தலைக்காவலர் ஜெயக்குமாரி என்பவர் அழைத்து வந்த விவரம் என்னுடைய விசாரணையில் தெரியவந்தது. மேற்படி இருவரும் சேலத்தில் இருக்கிறார்கள் என்ற விபரம் எதன் அடிப்படையில் தெரிய வந்தது என்ற விபரம் என்னுடைய விசாரணையில் தெரிய வந்ததா என்றால் அவர்களது செல்போன் டவர் லொகேஷனை வைத்து செல்போன் சேலத்தில் இருப்பதாக

தெரிந்து கொண்டேன் மேற்படி விபரத்தை ஆய்வாளர் விசாரணையில் நான் குறிப்பிட்டுள்ளேன்.

2. மேற்படி இரண்டு நபர்களின் செல்போன் அழைப்பு பட்டியலை நான் கேட்டுப் பெற்றேனா என்றால் இல்லை. மேற்படி நபர்களின் செல்போன் அழைப்பு பட்டியில் அடிப்படையில் அவர்கள் இருந்த இடம் கண்டுபிடிக்கப்படவில்லை என்றாலும் எதிரி தான் சிவன்மதியின் தந்தை சுப்பிரமணி என்பவரை போன் மூலம் தொடர்பு கொண்டு அவர்கள் சேலத்தில் இருப்பதாக தகவல் சொன்னார் என்றாலும் அதன் அடிப்படையில் தான் அவர்கள் இருவரையும் காவல் நிலையம் கூட்டி வந்தோம் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகார் தான் மேற்படி உதயகுமார்ல தன்னுடைய மனைவி காணாமல் போனது தொடர்பாக கொடுத்த புகார் என்றால்சரிதான். அது ஏற்கனவே எ.ம.சா.ஆ.1 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது அதில் 10.04.2017 ம் தேதி புகார் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் 10.04.2017 ஆம் தேதி புகார் எழுதிக் கொண்டு வந்திருந்தார் ஆனால் 13/4/2017 ஆம் தேதி தான் சி.எஸ்.ஆர் பதிவு செய்யப்பட்டது ஆனால் புகார் மேற்படி தேதியை மாற்றி தரவில்லை. தேதி மாற்றி வாங்குவதற்கு மேற்படி புகாரை பெற்றவர் முயற்சி எதுவும் எடுக்கவில்லை என்பதை என்னுடைய விசாரணையின் போது நான் தெரிந்து கொண்டேன்.

3. மேற்படி புகார் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் தயாரிக்கப்படாததால்தான் அதில் மேற்கண்ட முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 13/4/2017 தேதியில் புகார் பெற்ற பிறகு 16.04.2017 ஆம் தேதி சிவன்மதி மற்றும் ராக்கி ஆகியோர் சேலத்தில் இருந்து காவல் நிலையம் கூட்டிவரப்பட்டார்கள். 10.04.2017 ஆம் தேதி புகார் பெறப்பட்டு 13/4/2017 வரையில் மேற்படி புகாரின் மீது காவல்துறையினர் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று சொன்னால் இடைப்பட்ட காலத்தில் அவர்களின் அழைப்பு பட்டியலை பெற்று அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. புகார் கொடுத்த தேதியில் சி.எஸ்.ஆர் போடப்பட

வேண்டும் என்றால் சரிதான். 10–ம் தேதி கொடுக்கப்பட்ட புகாரை 13 ஆம் தேதி கொடுத்ததாக பொய்யான ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. சிவன் மதியை 05.04.2017 ஆம் தேதி கூப்பிட்டுச் சென்றதாக ராக்கி குறிப்பிட்டுள்ளார். 05.04.2017 முதல் 10.04.2017 வரை சிவன்மதி குடும்பத்தில் இருந்து எந்த புகாரும் காவல் நிலையத்தில் பெறப்படவில்லை என்றால் சரிதான்.

4. 13.04.2017 ஆம் தேதி ஆய்வாளரின் உத்தரவின் படி மேற்படி சிவன்மதியை திருப்பூரில் இருக்கும் அமைதி இல்லம் என்ற ஹோமில் கொண்டு போய் விட்டார்கள். முதன்முறை மேற்படி சிவன்மதி தன்னுடைய கணவருடன் செல்ல மறுத்ததால் தான் அவரை அமைதி இல்லத்தில் தங்க வைத்தோம். ஒரு வயது வந்த பெண்ணை அமைதி இல்லத்தில் தங்க வைப்பதற்கு காவல்துறையினருக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னால் அவரது விருப்பத்தின் பேரில் வைக்கலாம். மேற்படி சிவன்மதி அமைதி இல்லத்திற்கு செல்வதற்கு விருப்பம் உள்ளது என்பதை வாய்மொழியாகச் சொன்னார். 15.04.2017 ம் தேதி எதிரி தான் சிவன்மதியுடன் தொடர்பு கொள்ள மாட்டேன் என்று எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்து விட்டார் என்று சொன்னால் சரிதான். தன்னுடைய கணவருடன் செல்ல மாட்டேன் என்று சிவன்மதி எழுத்துப்பூர்வமாக எழுதிக் கொடுக்கவில்லை. சிவன்மதி காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்த மனுவில் தேதி குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

5. எனது விசாரணை சரிவர நடத்தப்படாததால்தான் மேற்படி சிவன்மதி எழுதிக் கொடுத்ததாக கூறப்படும் கடிதம் பின்னிட்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 19.04.2017 தேதி வரையில் மேற்படி சிவன்மதி மரியாதை இல்லம் என்கிற இல்லத்தில் தங்கள் வைக்கப்பட்டிருந்தார் என்றாலும் ஆனால் 16.04.2017 ஆம் தேதியே அவர்களுக்கு இடையேயான பிரச்சனை முடிந்து விட்டதாக குறிப்பிட்டு நாங்கள் ஆவணங்களை தயார் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. சிவன்மதி மற்றும் எதிரியை எவ்வளவு

நாட்களுக்கு பிறகு காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள் என்பது குறித்து என்னுடைய விசாரணையில் நான் குறிப்பாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். சிவன்மதியை எதிரி தான் அழைத்துச் சென்றுள்ளார் என்பதை அவரது நடவடிக்கை மூலம் தெரியும் என்று மேற்படி உதயகுமார் குறிப்பிட்டுள்ளார்.

6. வெள்ளகோவில் காவல்துறையினருக்கு ஆதரவாக மேற்படி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் உண்மை சம்பவங்கள் அனைத்தும் வெள்ளகோவில் காவல் துறையினருக்கு ஆதரவாக என்னால் மறைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் இவ் வழக்கில் அசல் ஆவணங்களை தாக்கல் செய்யாமல் ஒளிப்பட நகல்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. விசாரணையின் போது என் வசம் இல்லாததால் தான் அதை நான் வெள்ளக்கோயில் ஆய்வாளர் வசம் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல வெள்ளக்கோயில் காவல் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இந்த வழக்க ஆவணங்கள் பின்னிட்ட என்னால் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.04.02 17:36:30 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.